**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 733/2023**
**வழக்கு சாட்சி PW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகேசன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சமுத்திரம் | தொழில் | : | தலைமைக்காவலர் |
| கிராமம் | : | ருக்மணியம்மாள்புரம் | வயது | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 24th, 2025.

**(3ம் எதிரி ஆஜரில்லை. இதர எதிரிகள் ஆஜர். கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது புளியரை காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் ஆலங்குளம் காவல்நிலையத்தில் காவலராக பணியில் இருந்தபோது, 25.05.2018 அன்று காலை 11.00 மணிக்கு தூத்துக்குடி மாவட்டம் ஸ்டெர்லைட் ஆலையத்திற்கு எதிராக ஏற்பட்ட சட்ட ஒழுங்கு பிரச்சனை காரணமாக ஆலங்குளம் காவல்நிலைய எல்கைக்குட்பட்ட பகுதிகளில் பிரச்சனை ஏற்படாமல் இருக்க உதவி ஆய்வாளர் முகைதீன் அப்துல் காதர், சிறப்பு உதவி ஆய்வாளர் மாரியப்பன், முதல்நிலைக்காவலர் ஜெயபாலகிருஷ்ணன், 2ம்நிலை காவலர் ஆனந்தராஜ் ஆகியோர்கள் சகிதம் ஆலங்குளம் புதிய பேருந்து நிலையம் அருகேயுள்ள காமராஜர் சிலை முன்பு ரோந்து அலுவல் செய்து கொண்டிருந்தபோது, அங்கு சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டிருந்த பின்பு பெயர், விலாசம் தெரிந்து கொண்ட முருகன், மூர்த்தி, ஸ்ரீதரன்

ஆகியோர்களை விசாரித்தபோது போலீஸ்காரர்களுக்கு வேற வேலையே இல்லையா, எப்ப பார்த்தாலும் இதே வேலையா போச்சு, இவர்களை வெட்டி கொன்றால் தான் நிம்மதியாக இருக்கும் என்று கூறி முருகன் தனது சட்டைக்கு பின்புறம் வைத்திருந்த அரிவாளை எடுத்து உதவி ஆய்வாளர் முகைதீன் அப்துல் காதரை கொலை செய்ய வேண்டும் என்ற நோக்கில் வெட்டினார். அவர் விலகி விட்டதினால் அந்த வெட்டு அவர் மீது படவில்லை. மூர்த்தி மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து சிறப்பு உதவி ஆய்வாளர் மாரியப்பன் அவரை நோக்கி வெட்டினார். அவர் விலகி விட்டதினால் அந்த வெட்டு அவர் மீது படவில்லை. அந்த வெட்டுக்கள் அவர்கள் மீது பட்டிருந்தால் அவர்கள் வெட்டுப்பட்டு இறந்திருப்பார்கள். நானும், என்னுடன் பணியில் இருந்த காவலர்களும், அங்கிருந்த பொதுமக்கள் உதவியுடன் அவர்களை பிடிக்க முயன்றபோது தேவடியா மக்களா, யாராவது பக்கத்தில் வந்தால் உங்களை வெட்டி கொன்று விடுவோம் என்று கொலை மிரட்டல் செய்து விட்டு 3 பேரும் அரிவாள்களை தலைக்கு மேலாக சுற்றிக்கொண்டு அங்கிருந்து சென்று விட்டார்கள். இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும், போக்குவரத்தும் சிறிது நேரம் பாதிக்கப்பட்டது. அரசு ஊழியர்களாகிய எங்களை பணி செய்யவிடாமல் தடுத்தும், கொலை செய்ய வேண்டும் என்ற நோக்கில் செயல்பட்ட 3 பேர்களின் மீது நடவடிக்கை எடுக்க அன்றைய தினம் நண்பகல் 12.00 மணிக்கு காவல்நிலையத்தில் பணியில் இருந்த உதவி ஆய்வாளர் சுதாகரன் அவர்களிடம் உதவி ஆய்வாளர் புகார் மனு கொடுத்தார். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.25 11:36:52 +0530